முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

முன்னிலை:– திரு.ஏ.கே.மெஹ்பூப் அலிகான், **B.L.M., L. L.M., P.G.D.PM/IR, Dip.in.J.J & J.Psy., PG.D.D.F.,**

முதன்மை மாவட்ட நீதிபதி, இராமநாதபுரம்.

2026 ஆண்டு மார்ச் திங்கள் 10–ம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஸ்ரீவிசுவாவசு வருடம் மாசி திங்கள் 26 ம் நாள் செவ்வாய்க்கிழமை

**I.D.O.P.No.73/2025**

**CNR.No.TNRM01-002821-2025**

டேவிட் சுந்தரம் ....மனுதாரர்

–எதிர்–

லீமா ....எதிர்மனுதாரர்

இம்மனுவானது இறுதியாக என் முன்னர் 06.03.2026–ம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.தினேஷ்ராஜ் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜரில்லாததால் வருகையில்லா எதிரவராகத் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையிலும் ஆவணங்களை ஆராய்ந்தும், மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்.

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 21.08.2016 ம் தேதியன்று வேளாங்கன்னியில் உள்ள புனித ஆரோக்கிய அன்னை பேராலயத்தில்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.10 18:03:17 +0530

ஆலயத்தில் கிறிஸ்தவ முறைப்படி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்கி உத்தரவிட வேண்டுமென்று கோரி விவாகரத்து சட்டம் பிரிவு 10(1) மற்றும் உட்பிரிவு (i)(X)–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் பின்வருமாறு</u>:–**

**2.1.** மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 21.08.2016 ம் தேதியன்று வேளாங்கன்னியில் உள்ள புனித ஆரோக்கிய அன்னை பேராலயத்தில் ஆலயத்தில் வைத்து பெரியோர்கள் மற்றும் உறவினர்கள் முன்னிலையில் கிறிஸ்தவ முறைப்படி திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது எதிர்மனுதாரருக்கு எவ்வளவு நகை அணிவித்தார்கள் என்பது பற்றி மனுதாரருக்கு தெரியாது. மனுதாரருக்கு 3 சவரன் நகை மட்டும் எதிர்மனுதாரர் தரப்பில் போடப்பட்டது. மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரருக்கு 5 சவரன் தாலி செயின் போடப்பட்டுள்ளது. மேற்படி உபயமனுதாரர்களின் நகைகள் அனைத்தும் எதிர்மனுதாரர் வசமே உள்ளது. திருமணத்திற்குப் பின்னர் உபயமனுதாரர்கள் இருவரும் மனுதாரரின் வீட்டில் தனிக்குடித்தனம் வாழ்ந்து வந்த சமயத்தில் எதிர்மனுதாரரை மனுதாரர் அவரது செலவில் ரூ.3 லட்சம் வரை செலவு செய்து பி.எட் படிக்க வைத்து குருமிலாங்குடியில் உள்ள புனித சுவக்கின் அன்னால் நடுநிலைப்பள்ளியில் வேலைக்கு சேர்த்து விட்டார். அவ்வாறு பணி செய்த காலத்தில் எதிர்மனுதாரர் அவருடன் படித்தவரான சரவணன் என்பவருடன் பழக்கம் ஏற்பட்டு போன் மூலமும், நேரடியாகவும் பழகி வந்துள்ள விவரம்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.10 18:03:26 +0530

அறிந்த மனுதாரர் எதிர்மனுதாரரை கண்டித்தபோது எதிர்மனுதாரர் தான் பணக்கார வீட்டில் வசதிவாய்ப்புக்களுடன் வாழவே ஆசைப்பட்டதாகவும், தனது பெற்றோர் கட்டாயத்தினால் திருமணம் செய்ததாகவும் கூறியுள்ளார்.

2.2. மேற்படி விவரம் பற்றி மனுதாரர் எதிர்மனுதாரரின் பெற்றோர்களிடம் தெரிவித்துள்ளார். எதிர்மனுதாரரின் பெற்றோர்களும் எதிர்மனுதாரரை கண்டித்தும் மேற்படி சரவணன் என்பவரது உறவை துண்டிக்க சொல்லியும் எதிர்மனுதாரர் மேற்படி நபருடன் இருசக்கர வாகனத்தில் தேவகோட்டை, காரைக்குடி ஆகிய இடங்களுக்கு சென்று வருவதை வாடிக்கையாக கொண்டிருந்ததாகவும், மேலும் எதிர்மனுதாரர் தான் வேலை செய்து சம்பாதித்த பணத்தை மனுதாரர் வசம் கொடுக்காமலும் இருந்துள்ளார். மேற்படி விவரம் பற்றி கேட்டதால் மனுதாரருடன் சண்டையிட்டு உன்னுடன் வாழமுடியாது என தெரிவித்துள்ளார்.

2.3. மேற்படி எதிர்மனுதாரரின் நடவடிக்கைகள் மனுதாரருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியதால் எதிர்மனுதாரரின் அலைபேசியை ஆய்வு செய்தபோது அதில் எதிர்மனுதாரர் பல்வேறு வகைகளில் அவரது போட்டோக்களை சரவணன் என்பவருக்கு அனுப்பியுள்ளதும், போன் அழைப்பு குறித்த பதிவை பார்த்தபோது சரவணன் மற்றும் தோளூர் ஜேம்ஸ் என்பவருடனும், கருங்காலக்குடி கணபதி என்பவருடனும் அதிகளவில் பேசியுள்ளதும், புகைப்படங்கள் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளதும் தெரியவந்துள்ளது. அது குறித்த மனுதாரர் எதிர்மனுதாரரை கண்டித்தபோது, எதிர்மனுதாரரின் தூண்டுதலின்பேரில் கணபதி என்பவர்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.10 18:03:29 +0530

மனுதாரருக்கு அலைபேசியில் மிரட்டல் விடுத்துள்ளார். மனுதாரர் மேற்படி விவரங்கள் பற்றி பஞ்சாயத்து தலைவர் மற்றும் ஊர் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் எதிர்மனுதாரரையும், அவரது பெற்றோரையும் கண்டித்து மனுதாரருடன் சேர்ந்து வாழ வகைசெய்த போது எதிர்மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டிற்கு செல்வதையே வழக்கமாக கொண்டிருந்தார்.

**2.4.** மேற்படி எதிர்மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டில் இருந்து கொண்டு அவரது தவறான பழக்கவழக்கத்தை மாற்றிக்கொள்ளாமல் வாழ்ந்து வந்துள்ளார். மேலும் எதிர்மனுதாரரின் பெற்றோர்களையும் ஏமாற்றி அவர்களை நம்பவைத்து அவர்களுடன் வாழ்ந்தால் மட்டுமே சுதந்திரமாகவும், நினைத்தவருடன் சேர்ந்து ஊர்சுற்றவும், இன்பமாகவும் வாழ முடியும் என்ற நோக்கத்துடன் மனுதாரரை பிரிந்து வாழ்ந்து வருகிறார். மேலும் பல பொய்யான குற்றச்சாட்டுக்களை மனுதாரர் மீது எதிர்மனுதாரர் சுமத்திவிட்டு அவரது பெற்றோரிடம் குழந்தைகளை ஒப்படைத்துவிட்டு அவர் விரும்பிய நபர்களுடன் கோவையில் தனியாக வீடு பிடித்தும், கடை நடத்தியும் தவறான உறவு கொண்டு வாழ்ந்து வருகிறார். மேலும், மனுதாரர் அவரது குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி எதிர்மனுதாரரை அலைபேசியில் அழைத்தபோது இனிமேல் உன்னுடன் சேர்ந்து வாழ முடியாது என்றும் தன்னால் தனித்து வாழ முடியும் என்றும் நீ வேண்டுமென்றால் விவாகரத்து பெற்றுக்கொள் என்றும் இல்லையேல் பத்திரத்தில் நானே விவாகரத்து செய்ய சம்மதித்து கையெழுத்து செய்து கொடுக்கிறேன் என்றும் கூறியுள்ளார்.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.10 18:03:33 +0530

**2.5.** மேற்படி எதிர்மனுதாரரின் செயலாலும், கொடுமைகளாலும் மனுதாரர் மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிப்பு அடைந்துள்ள நிலையில், மனுதாரர் எதிர்மனுதாரரையும் அவரது குழந்தைகளையும் தன்னுடன் சேர்ந்து வாழ வைக்கக்கோரி திருவாடனை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கடந்த 06.10.2023ம் தேதியன்று புகார் கொடுத்துள்ளார். மேற்படி புகாரின் அடிப்படையில் விசாரணை செய்தபோது எதிர்மனுதாரரும் அவரது பெற்றோரும் மனுதாரருடன் சேர்ந்து வாழ முடியாது என்றும் மீறி வற்புறுத்தினால் தற்கொலை செய்து கொள்வேன் என்றும் மிரட்டியுள்ளார். இந்நிலையில், கடந்த 19.10.2023ம் தேதியன்று காலை 3 மணியளவில் எதிர்மனுதாரரின் தூண்டுதலின்பேரில் அவரது தாயார், சகோதரர் மற்றும் தகப்பனார், தோளூர் ஸ்டாலின் ஆகியோர்கள் ஆயுதங்களுடன் மனுதாரின் வீட்டின் கதவை தட்டி அவருக்கு கொலைமிரட்டல் விடுத்துள்ளனர். அது சம்பந்தமாக மனுதாரர் தொண்டி காவல் நிலையத்தில் புகார்மனு கொடுத்துள்ளார். ஆனால் எதிர்மனுதாரரும் அவரது வகை ஆட்களும் அவர்களது செல்வாக்கின் காரணமாக மேற்படி புகார்மனு மீது எவ்வித நடிவடிக்கையும் எடுக்கவிடாமல் தடுத்துவிட்டனர்.

**2.6.** எதிர்மனுதாரர் மனைவி என்ற முறையில் மனுதாரருக்கு எந்தவிதமான கடமைகளையும் செய்யாமல் அவர் விரும்பிய வாழ்க்கையை விரும்பிய நபர்களுடன் வாழ்ந்து வருவதாகவும், மேலும் மனுதாரர் ஓரியூரில் உள்ள புனித அருளானந்தர் மேல்நிலைப்பள்ளியில் தற்காலிக அலுவலராக பணி செய்து மாதம் ரூ.8,000/- சம்பளம் பெற்று தனது பெற்றோர்களையும், குழந்தைகளுக்கு அவ்வப்போது தேவையானவற்றை வாங்கி கொடுத்தும்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.10 18:03:37 +0530

பாதுகாத்து வருகிறார். ஆனால் எதிர்மனுதாரர் தவறான உள்நோக்கத்துடனும், மனுதாரரிடம் பணம் பறிக்கும் நோக்கத்திலும் பல பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு மனுதாரர் மீது ஜீவனாம்சம் கோரி திருவாடானை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் எம்.சி.7/2023 வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ பேச்சுவார்த்தை நடத்தியதில் மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்றும் நகை மற்றும் பணம் மட்டும் வேண்டும் என்றும் அதனை கொடுத்துவிட்டால் மனுதாரரையோ அவரது குடும்பத்தாரையோ எவ்வித இன்னல்களுக்கும் ஆளாக்காமல் தான் ஒதுங்கிக் கொள்வதாக கூறியுள்ளார். ஆனால் மனுதாரர் தன்னுடைய குறைவான வருமானத்தில் தனது மகன்களுக்கு தேவையான உடைமைகள் மற்றும் கல்வி கட்டணங்கள் செலுத்தியும் பராமரித்து வருகின்றார்.

2.7. இந்நிலையில், மனுதாரர் அவரது மக்களுக்கு வாங்கி கொடுக்கும் உடமைகளை வாங்க கூடாது, மனுதாரரை பார்க்க கூடாது, பேசக்கூடாது என்றும் குழந்தைகளை மிரட்டி வைத்ததால் மேற்படி குழந்தைகளை மனுதாரர் வசம் ஒப்படைக்கும்பட்சம் அவர்களுக்கு தேவையான அனைத்து சவரட்சனைகளையும் செய்ய தயாராகவும், குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக இருப்பதாகவும், குழந்தைகளை தன்னிடம் ஒப்படைக்க கோரி தனி மனுவும் தாக்கல் செய்துள்ளதாகவும் கூறியுள்ளார். ஆனால் எதிர்மனுதாரர் மனுதாரரை கொடுமைப்படுத்தி வருவதாலும், மனுதாரரை எதிர்மனுதாரர் நீண்ட காலமாக பராமரிக்காமலும், தொடர்ந்து பிரச்சனை செய்து வருவதாலும்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.10 18:03:40 +0530

இனிமேல் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 21.08.2016 ம் தேதியன்று வேளாங்கன்னியில் உள்ள புனித ஆரோக்கிய அன்னை பேராலயத்தில் வைத்து கிறிஸ்தவ முறைப்படி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்கி உத்தரவிட வேண்டுமென்று கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் வருகையில்லா எதிரவராகத் தீர்மானிக்கப்பட்டுள்ளார்.

4. மனுதாரர் தரப்பில் மனுதாரர் டேவிட் சுந்தரம் என்பவர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. எதிர்மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. <u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில்</u>:–

மனுதாரர் மனுவில் கோரியுள்ளது போல் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 21.08.2016 ம் தேதியன்று வேளாங்கன்னியில் உள்ள புனித ஆரோக்கிய அன்னை பேராலயத்தில் வைத்து கிறிஸ்தவ முறைப்படி நடைபெற்ற

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.10 18:03:43 +0530

திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்கி உத்தரவிட வேண்டுமென்று கோரி விவாகரத்து சட்டம் பிரிவு 10 மற்றும் உட்பிரிவு (i) மற்றும் (X)–ன் கீழ் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**தீர்வு**:–

**6.** மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 21.08.2016 ம் தேதியன்று வேளாங்கன்னியில் உள்ள புனித ஆரோக்கிய அன்னை பேராலயத்தில் வைத்து கிறிஸ்தவ முறைப்படி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்கி

உத்தரவிட வேண்டுமென்று கோரி விவாகரத்து சட்டம் பிரிவு 10 மற்றும் உட்பிரிவு (i) மற்றும் (X)–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7.** இம்மனுவில் உள்ள மனுதாரர் டேவிட் சுந்தரம் என்பவர் மனுதாரர் தரப்பு சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ளார். மனுதாரர் தனது நிரூபண வாக்குமூலத்தில், தனக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 21.08.2016 ம் தேதியன்று வேளாங்கன்னியில் உள்ள புனித ஆரோக்கிய அன்னை பேராலயத்தில் வைத்து கிறிஸ்தவ முறைப்படி திருமணம் நடைபெற்றது என்றும், மேற்படி திருமணம் நடைபெற்றதற்கான திருமண அழைப்பிதழ் ம.சா.ஆ.1 ஆகவும்,

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.10 18:03:47 +0530

தனக்கும், எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணத்தை பதிவு செய்ததற்கான பதிவு சான்றிதழ் ம.சா.ஆ.5 ஆகவும், தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார்.

**8.** தானும், எதிர்மனுதாரரும் சந்தோசமாக குடும்பம் நடத்தி வந்த நிலையில், எதிர்மனுதாரர் பல நபர்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டு மனுதாரரை பிரிந்து கோவையில் வாழ்ந்து வந்ததால் எதிர்மனுதாரரின் செயலாலும், கொடுமைகளாலும் மனுதாரர் மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிப்பு அடைந்துள்ள நிலையில், மனுதாரர் எதிர்மனுதாரரையும் அவரது குழந்தைகளையும் தன்னுடன் சேர்ந்து வாழ வைக்கக்கோரி திருவாடனை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கடந்த 06.10.2023 ம் தேதியன்று புகார் கொடுக்கப் பட்டதற்கான மனு மற்றும் மனு ரசீது ம.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார்.

**9.** மேற்படி புகாரின் அடிப்படையில் விசாரணை செய்தபோது எதிர்மனுதாரரும் அவரது பெற்றோரும் மனுதாரருடன் சேர்ந்து வாழ முடியாது என்று கூறிய நிலையில், கடந்த 19.10.2023 ம் தேதியன்று எதிர்மனுதாரரின் தூண்டுதலின்பேரில் அவரது தாயார், சகோதரர் மற்றும் தகப்பனார், தோளூர் ஸ்டாலின் ஆகியோர்கள் ஆயுதங்களுடன் மனுதாரருக்கு கொலைமிரட்டல் விடுத்தது சம்பந்தமாக மனுதாரர் தொண்டி காவல் நிலையத்தில் கொடுத்த

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.10 18:03:50 +0530

புகார்மனு ம.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

**10.** எதிர்மனுதாரர் மனைவி என்ற முறையில் மனுதாரருக்கு எந்தவிதமான கடமைகளையும் செய்யாமல் அவர் விரும்பிய வாழ்க்கையை விரும்பி நபர்களுடன் வாழ்ந்து வந்து மனுதாரரிடம் பணம் பறிக்கும் நோக்கத்திலும் பல பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு மனுதாரர் மீது ஜீவனாம்சம் கோரி திருவாடானை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் எம்.சி.7/2023 தாக்கல் செய்த வழக்கு ம.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

**11.** மனுதாரர் தனது குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ அழைத்தபோதும் சேர்ந்து வாழாமல் மனுதாரை புறக்கணித்து வாழ்ந்து வந்து மனுதாரருக்கு மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளதாகவும், எதிர்மனுதாரர் தன்னை விட்டு பிரிந்து கோவையில் வாழ்ந்து வருவதாகவும் ம.சா.1 சாட்சியத்தில் இருந்து தெரியவருகிறது. எனவே இனியும் மனுதாரர், எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ சாத்தியக்கூறுகள் இல்லை என்பதால், மனுதாரரும், எதிர்மனுதாரரும் திருமண பந்தத்திலிருந்து பிரிந்து கொள்வதை தவிர மனுதாரருக்கு வேறு வழியில்லை என்பதாலும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.10 18:03:56 +0530

21.08.2016-ம் தேதியன்று நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து உத்தரவிடவேண்டுமென்று கோரியுள்ளார்.

**12.** மேற்கூறியவாறு மனுதாரர் தரப்பில் கூறியுள்ள குற்றச்சாட்டுக்களை மறுதலித்து எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை. எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் வருகையில்லா எதிரவராகத் தீர்மானிக்கப்பட்டுள்ளார். மனுதாரர் தன்னுடைய மனுவில் கூறியுள்ள விஷயங்களை நிரூபண வாக்குமூலத்தில் தெளிவாக கூறியுள்ளார். அக்கூற்றுக்களை எதிர்மனுதாரர் தரப்பில் மறுத்து எதிர்உரையோ, சாட்சியமோ முன்வைத்து வழக்காடாத நிலையில் மனுதாரர், எதிர்மனுதாரர் மீது கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**13.** எதிர்மனுதாரர் தரப்பில் அவர் மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்து எந்தவொரு சாட்சியங்களையும் முன்னிலைப்படுத்த எதிர்மனுதாரர் முன்வரவுமில்லை. எனவே மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ள கூற்றுக்களையும், சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் மனுதாரர் கூறியுள்ள விஷயங்களையும் கருத்தில்கொண்டும், மனுதாரரும், எதிர்மனுதாரரும் ஒருவரையொருவர் பிரிந்து வாழ்ந்து வருகின்ற நிலையிலும் மனுதாரர், எதிர்மனுதாரருடன் இனியும் சேர்ந்து வாழ இயலாது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து மனுதாரர் கோரியுள்ளவாறு

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.10 18:03:59 +0530

மனுதாரருக்கு விவாகரத்து பரிகாரம் கிடைக்கக்கூடியது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவில்,** இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 21.08.2016 ம் தேதியன்று வேளாங்கன்னியில் உள்ள புனித ஆரோக்கிய அன்னை பேராலயத்தில் வைத்து கிறிஸ்தவ முறைப்படி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்கி உத்தரவிட வேண்டுமென்று கோரி விவாகரத்து சட்டம் பிரிவு 10 மற்றும் உட்பிரிவு (I) மற்றும் (X)–ன் கீழ் விவாகரத்துப் பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 10–ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.10 18:04:03 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

**மனுதாரர் தரப்பு சாட்சி :–**

ம.சா.1 திரு. டேவிட் சுந்தரம்

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணம்</u>:-**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 21.08.2016 | மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே நடந்த திருமணத்திற்கான திருமண அழைப்பிதழ் -அசல் |
| ம.சா.ஆ.2 | 19.10.2023 | மனுதாரர் எதிர்மனுதாரர் மீது தொண்டி காவல் நிலையத்தில் கொடுத்த புகார்மனு ஜெராக்ஸ் நகல் |
| ம.சா.ஆ.3 | 06.10.2023 | திருவாடனை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் மனுதாரருக்கு வழங்கப்பட்ட மனு ரசீது ஜெராக்ஸ் நகல் |
| ம.சா.ஆ.4 | -- | எம்.சி.07/2023 வழக்கில் எதிர்மனுதாரர் மனுதாரர் மீது தாக்கல் செய்த மனு சார்வு நகல் |
| ம.சா.ஆ.5 | 01.06.2025 | மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணத்தை பதிவு செய்ததற்கான பதிவு சான்றிதழ்-அசல் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>:-**

-இல்லை-

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.10 18:04:08 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.